# தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்
# கொழும்பு பல்கலைக்கழகம்

# பணிப்பாளர் பதவி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவக (National Institute of Library and Information Sciences – NILIS) பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள்/ பெயரிடப்பட்டவர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு 63 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். வெற்றிகரமான விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்டவர் நியமிக்கப்படும் திகதியில் இருந்து மூன்று ஆண்டு காலம் அல்லது அவர் தமது வயது 65 ஐ பூர்த்தி செய்யும் வரை ஆகிய இரண்டில் முதலில் வருகின்ற சந்தர்ப்பம் வரை பதவிக் காலம் அமுலில் இருக்கும்.

NILIS என்பது கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனம் என்பதோடு அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகிக்கப்பட்ட சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டப் பின் படிப்பு கற்கைகள் நடத்தப்படும் நிறுவனம் ஒன்றாகும். NILIS மாணவர்களில் பிரதானமாக தற்போது அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் உள்ளனர். அது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவையிலும் ஈடுபட்டுள்ளது.

பணிப்பாளர் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று மற்றும் கல்விசார் அதிகாரியாவார். அவர் நிறுவனத்தின் பிரதான கணக்கு அதிகாரி என்பதோடு, நிறுவனத்தின் நிர்வாக சபை மற்றும் கல்விசார் குழுவின் அங்கத்தவராவார். முகாமைத்துவ கொள்கை தயாரிப்பு மற்றும் செயற்படுத்தல் மற்றும் நிர்வாக சபையின் முடிவுகளை செயற்படுத்துவதற்கான கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதன் பொறுப்பை அவர் ஏற்பார். அவர் நிறுவனத்தின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பு வகிப்பதால் கல்விசார் சிறப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக ரீதியான முகாமைத்துவம் மற்றும் பயன்தரும் மற்றும் பக்கச்சார்பற்ற நிர்வாகத் தலைமை ஆகிய அடிப்படைகளை பின்பற்றுதல் வேண்டும். நிறுவனத்திற்குள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பும் பணிப்பாளர் வசமாகும். அவர் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் மற்றும் பணிக் குழுவின் தேவைகள் தொடர்பில் புரிதல் இருத்தல் வேண்டும் என்பதோடு, நிதி உருவாக்குவதற்கும், பல்கலைக்கழகம் மற்றும் வேறு அது சார்ந்த நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், சர்வதேச தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் முடியுமாக இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் அவரது அறிவுசார் முகாமைத்துவ திறமைகள் மூலம் நிறுவனத்தின் இலக்குகளை எட்டுவதற்கான நோக்கு உள்ள நபர் ஒருவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்ட நபர் சிறந்த ஆய்வை அறிவித்திருத்தல் வேண்டும் என்பதோடு, உயர் தரமான ஆளிடை திறமையுடன் தலைமைத்துவ பண்புகள் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பில் தெளிவான புரிதல் உள்ள, கல்வி ரீதியில் உயர்ந்த மற்றும் நேர்மையான ஒருவராக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணிப்பாளருக்கு பேராசிரியர் ஒருவருக்கு உரித்தான சம்பளம் மற்றும் பதவிக்கு உரிய வேறு கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறும்.

**விண்ணப்பம்/ முன்மொழிவுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இருத்தல் வேண்டும்:**

I) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரரின்/ பெயரிடப்பட்டவரின் முழுமையான சுயவிபரக்கோவை (பிறப்புச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்).

II) கல்விசார் மற்றும் ஆராய்ச்சி சிறப்புத்தன்மை, தொழில்முறை தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சி, பயனுள்ள தலைமைத்துவம் போன்றவை சார்ந்த அத்தாட்சிகளின் பிரதிகள்.

III) நிறுவனத்தின் அபிவிருத்தி தொடர்பிலான கொள்கை அறிவிப்பு

IV) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் எட்டுவதற்கு எதிர்பார்க்கும் இலக்குகள் தொடர்பில் முன்மொழிவுகள் உள்ளடங்கிய சுருக்கமான விபரம்.

V) முன்மொழிவு ஒன்றாயின், அவ்வாறு பெயரிடப்படும் நபரின் விருப்பத்தை உள்ளடக்கிய ஒரு கடிதம்

VI) NILIS நிறுவனம் தவிர, வேறு அரச துறை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான நிறுவனம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்/ பெயரிடப்பட்டவர் ஒருவராயின், அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியுமா என்பதை குறிப்பிட்டு தொழில் வழங்குநரினால் கடிதம்.

நேர்முகப்பரீட்சைக்காக அபேட்சகர்கள் தனிப்பட்ட முறையில் அழைக்கப்படுவர். விசேட சந்தர்ப்பம் ஒன்றில், அபேட்சகர் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் தோன்றுவது முடியாத சந்தர்ப்பத்தில், அவர் வீடியோ மாநாடு அல்லது ஸ்கைப் மூலம் நேர்முகப்பரீட்சைக்கு தோன்றுவதற்கு அனுமதி அளிக்கப்படும். அபேட்சகர் ஒருவர் குறைந்தது பத்து (10) விநாடிகள், ஆனால் பதினைந்து (15) விநாடிகள் மேற்படாது சுருக்கமான நிகழ்ச்சி வழங்கல் ஒன்றுக்காக தயாராகுதல் வேண்டும். நேர்முகப்பரீட்சை 2024 ஜனவரி 01 ஆம் திகதிய UGC சுற்றுநிருப இலக்கம் 01/2024 இன் இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தாளில் உள்ள அளவுகோல்களுக்கு அமைய நடைபெறும் என்பதோடு UGC இணையதளத்திற்கு பிரவேசித்து (https://www.ugc.ac.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் பிரதி பதிவாளர், தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு-03 என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில்/ கடித உறை ஒன்றில் அனுப்ப வேண்டும் என்பதோடு 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதி பி.ப. 3.00 க்கு அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம்/ முன்மொழிவை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பணிப்பாளர் பதவி'' என்று குறிப்பிடுதல் வேண்டும். இது தவிர மேல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் PDF வடிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட மென் பிரதி ஒன்றை dr@nilis.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள்/ முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.

**முகாமைத்துவ சபையின் செயலாளர்**
**தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவகம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**Web: https//nilis/cmb.ac.lk**
**Tel: 0112259646**
**2024.08.16**